
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1250**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

**மாற்றம் ⇆ ஏமாற்றம்!**

# டெல்லியில் கவிழ்ந்த கில்லி



**தனது படத் தயாரிப்பாளரை, தமிழ்நாடு அரசின் டெல்லி பிரதிநிதியாக நியமித்திருக்கிறார், ஃசோபா மாடல் முதலமைச்சர். ஆந்திராவைச் சேர்ந்த அவருக்கு தமிழ்நாட்டின் பிரச்சினைகளே தெரியாது. அவருக்குத் தெரிந்தது எல்லாம் விஜய் நடித்த திரைப்படங்கள்தான். தமிழ்நாட்டின் பிரச்சினைகளுக்கு அவரின் ரியாக்‌ஷன்ஸ் இப்படித்தானே இருக்கும்!**

**மீனவர் பிரச்சினை :** மீனவர்கள் எல்லாம் எதுக்குத் தேவையில்லாம படகுல மீன் பிடிக்கப்போறாங்க? எங்க தளபதி ‘சுறா’ படத்தில் நடிச்சதைப் போல் நீந்தியே போய் மீன் பிடிக்கலாமே!

**மாநில அரசுக்குப் போதுமான நிதி ஒதுக்காதது :** தமிழ்நாட்டுக்கு நீங்க கொஞ்சமா நிதி ஒதுக்கினா போதும். பத்தாயிரம் கோடி கொடுத்தோம், ஒரு இலட்சம் கோடி கொடுத்தோம்னு சும்மா அடிச்சுவிடுங்க. நாங்கல்லாம் அப்படித்தான் ‘நூறு கோடி வசூல்’, ‘இருநூறு கோடி வசூல்’னு அடிச்சுவிடுவோம்.

**இருமொழிக் கொள்கை :** நானே ஆந்திராக்காரர்தான். நடிக்கத் தெரியாத எங்க தளபதியும் அக்கட தேசத்து ஆந்திரா மகேஷ்பாபு படங்களை ரீமேக் பண்ணித்தான் அட்டக்காப்பி அடிப்பாரு. அதுதான் எங்க அரசுக்கு இருமொழிக் கொள்கை. என்னது... அண்ணா சொன்னாரா, எங்களுக்குத் தெரிஞ்ச ஒரே அண்ணா, விஜயண்ணாதான்!

**தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களைச் சேர்த்துக்கொள்ளவில்லை என்றால்:** இதுக்கெல்லாம் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார்கள். எங்க தளபதி ‘கில்லி’ படத்தில் செமி ஃபைனல் விளையாடாமலே ஃபைனல் விளையாட வருவார்னா பார்த்துக்கங்களேன்!

**மேற்குவங்கத்தைப் போல் இனி தமிழ்நாட்டிலும் சத்துணவில் முட்டை போடக்கூடாது என்று ஒன்றிய அரசு வலியுறுத்தினால்... :** நோ பிராப்ளம் ப்ரோ! எங்க தளபதியே ‘என்னாத்த சொல்வேனுங்க தயிர்சாதம் ரெடி பண்ணுங்க’ன்னு தான் சொல்லியிருக்கார்!

**புதிய கல்விக் கொள்கை :** நாங்க, ‘மாநில கல்விக் கொள்கை’ ரெடி பண்ணியிருக்கோம். திருக்குறள், சிலப்பதிகாரம், சீறாப்புராணம், இயேசு காவியத்தை எல்லாம் எடுத்துட்டு, தளபதியின் சிறப்பான வரிகளான ‘கொக்கோகோலா பிரவுன் கலருடா... எங்க அக்கா பொண்ணும் அதே கலருடா’, ‘வாடி வாடி வாடி, கைபடாத சி.டி’, ‘சாம்பெயினைத் தான் திறக்கட்டுமா’ பாடல்களை வைப்போம். எங்க கல்வித் துறை அமைச்சரே வைப் ஆட்டம் ஆடி டெமோ காட்டுவாரு.

## ஊடகங்களுக்குப் பொறுப்பு வேண்டாமா?

த.வெ.க. ஆட்சியைக் கவிழ்க்க சதி என எந்த முகாந்திரமும் இல்லாமல் குற்றம் சாட்டுவதும், எந்த ஆதாரமும் இல்லாமல் அதை ஊடகங்கள் ஒளிபரப்புவதும், சகிக்க இயலாத எல்லைக்குச் சென்று கொண்டிருக்கிறது.

இது தொடர்பாகப் பதிவிட்டுள்ள மூத்த பத்திரிகையாளர் அரவிந்தாக்‌ஷன், ‘கடந்த தி.மு.க. ஆட்சியில் ஜாபர் சாதிக் என்ற நபர் என்.சி.பி. (NCB)-யால் கைது செய்யப்பட்டபோது, ‘ரூ.2,000 கோடி போதை மருந்து கடத்தல்’ என எந்த ஆதாரமும் இன்றி ஊடகங்கள் அடித்து விட்டனர். அந்தச் செய்தியை வெளியிட்ட ஒரு ஊடகம்கூட அந்த வழக்கின் தற்போதைய நிலை குறித்து அறிந்திருக்க வாய்ப்பில்லை. அந்த வழக்கின் குற்றப் பத்திரிக்கையில் எந்த இடத்திலும் ரூ.2,000 கோடிக்குக் கடத்தல் நடந்துள்ளதென என்.சி.பி. கூறவில்லை என்பதும் தெரியாது.

உண்மையாவது... பொய்யாவது? அப்போதைக்கு அடிச்சு விட வேண்டியதுதான். அதேதான் தற்போது, ஊத்தங்கரை எம்.எல்.ஏ. விவகாரத்திலும் நடந்துவருகிறது. ரூ.35 கோடி பண பேரம் என்பது, தற்போது ரூ.180 கோடியாக மாறி, ‘கார்ப்பரேட் கம்பெனி களமிறங்கியுள்ளதாகத் தகவல்’ என்ற கட்டத்திற்கு வந்துள்ளது.

அப்போதாவது என்.சி.பி-இல் பணியாற்றிய ஞானேஸ்வர் சிங் என்ற அதிகாரி முகத்தைக் காட்டினார். அவர்தான் வதந்திகளைத் திட்டமிட்டு பரப்பினார் எனத் தெரியவந்தது. ஆனால், எம்.எல்.ஏ. புகார் விவகாரத்தில் தகவல்களைப் பரப்பும் அதிகாரி, யாரென்றே செய்தியை வெளியிடும் ஒரே ஒரு நபருக்குக்கூட தெரியாது.

உண்மையில், அந்த எம்.எல்.ஏ. கொடுத்த புகாரை விசாரிக்கும் அதிகாரி யார்? மேற்பார்வையிடுவது யார்? வழக்கின் விசாரணை விவரங்கள் சொல்லப்படுவது ஆணையருக்கா? தனி நபர்களுக்கா?

ஒரே ஒரு நபரைக்கூட இன்னும் கஸ்டடி எடுத்து விசாரணை மேற்கொள்ளாத சூழலில், எப்படி இஷ்டத்துக்குத் தகவல்கள் கசிகின்றன? எதிர்க்கட்சிகள் குறித்து, மத்திய ஏஜென்சிகள் மூலமாக இஷ்டத்துக்கு பா.ஜ.க. அரசு அடித்து விடுவது சகஜம். அதே பாணியை த.வெ.க. அரசு தொடங்கியுள்ளதோ எனத் தோன்றுகிறது.

உண்மையில், ஆட்சியைக் கலைக்க சதி செய்வோரைக் கண்டுபிடிப்பது @tnpoliceoffl காவல் துறையின் நோக்கமா? அல்லது தினமும் ஏதாவது வதந்தியைக் கட்டாயம் பரப்ப வேண்டுமென்பதுதான் விசாரணை டீமிற்கு, உயரதிகாரிகள் கொடுத்துள்ள இலக்கா? ஏதாவது ஒரு தொலைக்காட்சி வதந்தியை ஒளிபரப்பினால் போதும், மற்ற எல்லோருமே ஈயடிச்சான் காப்பிதான். வாட்ஸ்அப்பில் ஃபார்வேர்டு ஆவதை ஒரு வரி மாறாமல் Live Report, Breaking News-ஆக அடிச்சுத் தள்ள வேண்டியதுதான். No verification, No cross check” என்று கடுமையாகச் சாடியுள்ளார்.

# வலை யோசை


**Manohar**



முதல்வர் விஜய்யை அவதூறாகப் பேசிய வழக்கில், திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணனைக் கைதுசெய்திருக் கிறது, த.வெ.க. அரசு.

த.வெ.க.வைச் சேர்ந்த பெண், கூட்டுப்பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில், திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் சரவணனை எப்போது கைது செய்யப்போகிறீர்கள்?

**Vinayaga Murugan**



என்னை மானமுள்ள பையன் இன்னு மதுரையில கேட்டாக. மன்னார்குடியில் கேட்டாக. இந்தப் பாட்டுக்குப் பொருத்தமாக டான்ஸ் ஆடக் கூடியவர்கள் இவர்களில் யார் உங்கள் தேர்வு?

1.வைகோ 2.தமிழருவி 3.நாஞ்சில் சம்பத்

**Tamilarasi Karthick**



அப்ப சும்மா விட்டது, இப்ப தப்பா போச்சு!







# ஃப்ளாஷ்பேக்



பா.அன்பழகன்



## தலைவர்களிடம் வாழ்த்து!

2011- ஆம் ஆண்டு மார்ச் மாதம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்த்துடன் சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்டேன். நெடுஞ்சாலைத் துறை முன்னாள் அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு, சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் அண்ணன் கு.பிச்சாண்டி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு வாழ்த்தினர். எங்களுக்குக் குழந்தை பிறந்ததும், நானும் என் துணைவியார் சந்தியாவும் குழந்தையுடன் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களிடத்தில் வாழ்த்துப் பெற்றோம். என் தாத்தா வெ.மன்னன், தந்தை ம.பாண்டியன் அவர்கள் வழியில் நானும், கழகமே குடும்பம் எனப் பயணித்துவருவதில் பெருமையடைகிறேன்.

**- பா.அன்பழகன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், வேடந்தவாடி, துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# மலரும் நினைவு (குரு)

## நியாயப்படி குற்றவாளிகள் இல்லை!

1953-ஆம் ஆண்டு மும்முனைப் போராட்டத்தில் டால்மியாபுரத்தில் இரயில் மறியல் போரில், கலைஞர் உள்ளிட்ட கழகத்தினர் கைது செய்யப்பட்டு, அரியலூர் நீதிமன்றம் கொண்டுசெல்லப்பட்டனர். ‘சட்டப்படி நீங்கள் குற்றவாளிகள்’ என்றார் நீதிபதி. ‘நியாயப்படி நாங்கள் குற்றவாளிகள் இல்லை’ என்று பதில் அளித்தார் கலைஞர். பின்னர், கைது செய்யப்பட்டவர்களில் கலைஞர் உள்ளிட்ட ஐவருக்கு, ஐந்து மாத கடுங்காவல் தண்டனையும் ரூ.35 அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் கட்டத் தவறினால், மேலும் ஒரு மாதம் கடுங்காவல் தண்டனை என விதிக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900